வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 1480 /அ4 /2024 நாள் : 24.04.2024

பொருள் : தமிழ்நாடு – பள்ளிக் கல்வி – சார்நிலைப்பணி – அரசு/ நகராட்சி/உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதுகலை ஆசிரியர்கள் பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் இதர ஆசிரியர்களுக்கு 2023 – 2024 ஆம் கல்வி ஆண்டிற்கு மாற்றுப் பணி ஆணை வழங்கியது – பணியிலிருந்து விடுவிக்க கோருதல் – சார்ந்து

பார்வை : சென்னை, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் செயல்முறைகள் ந.க.எண்.21243/சி3/இ1/2023 நாள்.01.03.2024.

#######

பள்ளிக் கல்வித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அரசு / நகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதுகலை ஆசிரியர்கள் / பட்டதாரி ஆசிரியர்கள் / மற்றும் இதர ஆசிரியர்களுக்கு கடந்த கல்வி ஆண்டில் (2023 – 2024) பல்வேறு காரணங்களின் அடிப்படையில் மாற்றுப் பணி மூலம் பணிபுரிய ஆணை பெறப்பட்ட ஆசிரியர்கள் (மாற்றுப்பணிபுரிபவர்கள்) பல்வேறு நிருவாக காரணங்களின் அடிப்படையிலும், மாணவர்களின் கல்வி நலன் கருதியும் மாவட்டத்திற்குள் உள்ள பள்ளிகளுக்கு 2023 – 2024 ஆம் கல்வி ஆண்டு வரை மட்டும் மாற்றுப் பணி மூலம் பணிபுரிய ஆணை வழங்கப்பட்டது.

எனவே மாற்றுப் பணி மூலம் பணிபுரிய ஆணை பெறப்பட்டுள்ள முதுகலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் இதர ஆசிரியர்களை பள்ளி இறுதி நாள் முடிவதற்கு முந்தைய நாளில் பணியிலிருந்து விடுவித்து பள்ளி இறுதி வேலை நாளில் அவரவர்களின் பள்ளியில் சேர நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகின்றது.

// ஒப்பம் //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள்,
வேலூர்மாவட்டம்.